திருப்பூர், வேளாண்மை இணை இயக்குநரின் செயல்முறை ஆணை
பிறப்பிப்பவர்: திரு எஸ்.சின்னச்சாமி, எம்.எஸ்ஸி(விவ)., எம்.பி.ஏ.,

செ.மு.ஆ.எண் : அ2/1721/2021 நாள்:08.08.2022

பொருள்: பணியமைப்பு - தமிழ்நாடு அமைச்சுப்பணி - கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்ட செல்வி ஜெ.சுகிர்தவர்த்தினி, பணியினை - இளநிலை உதவியாளர்(பிணையம்) பதவியில் பணிவரன்முறை செய்து ஆணையிடுதல் - தொடர்பாக.

பார்வை : 1. சென்னை, வேளாண்மை இயக்குநர் அவர்களின் செ.மு.ஆ எண்: அநிபி8/51768/2021 நாள்:27.06.2022.

2.அரசாணை (3டி)எண்.36 வேளாண்மை(வேநி9)துறை நாள்:07.04.2022.

29/8/2022

---------

பார்வை 1-ல் காணும் செயல்முறைகளின்படி கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்ட செல்வி ஜெ.சுகிர்தவர்த்தினி 18.02.2021முற்பகல் இவ்வலுவலக கட்டுப்பாட்டில் ஊத்துக்குளி, வேளாண்மை உதவி இயக்குநர் கட்டுப்பாட்டில் குன்னத்தூர் துணை வேளாண்மை விரிவாக்க மையத்தில் இளநிலை உதவியாளர்(பிணையம்)ஆக பணியில் சேர்ந்து பணியாற்றி வருகிறார்.

பார்வை(2)ல் காணும் அரசாணையின்படி செல்வி ஜெ.சுகிர்தவர்த்தினி, இளநிலை உதவியாளர்(பிணையம்) அவர்களின் பணியினை 18.02.2021முற்பகல் முதல் அவர் அப்பணிக்கு தேவையான உடற்தகுதிகளைப் பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு பணியினை வரன்முறைப்படுத்தி ஆணையிடப்பட்டுள்ளது.

இவருக்கு இளநிலை உதவியாளர்(பிணையம்)பதவியில் 18.02.2021முற்பகல் முதல் பணிவரன்முறைப் படுத்தியதைத் தொடர்ந்து மூன்றாண்டு பணிக்காலத்தில் இரண்டாண்டு காலம் தகுதிகாண் பருவத்தில் வைக்கப்படுகிறார். இவர் தகுதிகாண் பருவ காலத்தீல் பவானிசாகர் குடிமைப்பணி அடிப்படை பயிற்சியில் கலந்து கொண்டு தேர்ச்சி பெற வேண்டும். தகுதிகாண்பருவம் முடித்து ஆணை வழங்கப்பட்ட பிறகே இரண்டாவது மற்றும் தொடர் ஊதிய உயர்வுகள் பெற தகுதியுடையவராவார்.

(ஒம்)/- எஸ்.சின்னச்சாமி,
வேளாண்மை இணை இயக்குநர்(பொ)
திருப்பூர்.

பெறுநர்
செல்வி ஜெ.சுகிர்தவர்த்தினி, இளநிலை உதவியாளர்(பிணையம்)
துணை வேளாண்மை விரிவாக்க மையம், குன்னத்தூர்.

வழி & நகல் : வேளாண்மை உதவி இயக்குநர், ஊத்துக்குளி
நகல் : வேளாண்மை இயக்குநர், சென்னை அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது
நகல் : பணிப்பதிவேடு/இருப்புக்கோப்பு.

/ஆணைப்படி/

ஆட்சி அலுவலர். 12/8/2022

12-8-2022